# ADM COURT, SANKARANKOVIL

**தேதி** 25.03.2023

**அசல் வழக்கு எண்.154/2013**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து எங்களுக்கு எப்படி பாத்தியம் என்றால் சங்கரன் என்பவரிடம் இருந்து என் தந்தை கிரையம் வாங்கினார். என் தந்தை எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நாங்கள் எத்தனை வருடங்களாக அனுபவித்து வருகிறோம் என்றால் 40 வருடங்களாக அனுபவித்து வருகிறோம். வழக்கு சொத்திற்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது. என் தந்தை உயிருடன் உள்ளார். வழக்கு சொத்தில் உள்ள வீட்டின் பழைய கதவு எண்.ஏ 5, புதிய கதவு எண். ஏ 28. வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு என் தந்தை பெயரில் உள்ள தீர்வை ரசீது வைத்து 4ம் பிரதிவாதி நகராட்சியிடம் எனது தந்தை குடிநீர் இணைப்பு கேட்டு மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான்.

2. எனது தந்தை 4ம் பிரதிவாதியிடம் குடிநீர் இணைப்பு கேட்டு கொடுத்த மனுவில் எனது தந்தை அளித்த தகவலில் தவறு இருக்கும் பட்சத்தில் நகராட்சி எடுக்கும் சட்ட நடவடிக்கைக்கு கட்டுப்படுவதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி எனது தந்தை அளித்த ஆவணங்களின் அடிப்படையில் முறையான விசாரணைக்கு பிறகு வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு குடிநீர் இணைப்பு கொடுத்தார் என்றாலும், இந்த வழக்கில் நீதிமன்றம் குடிநீர் இணைப்பை

துண்டிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தால் அதனை செயல்படுத்தவும் 4ம் பிரதிவாதி தயாராக உள்ளார் என்றாலும் சரியல்ல. நீதிமன்ற உத்தரவுப்படி செயல்பட நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**